# உதயன்

சுடர் : 36 | கதிர் :200 | திங்கட்கிழமை | வைகாசி 31 ஆம் நாள் 14 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## பருத்தித்துறையில் 2 பொலிஸாருக்கு கொரோனா உறுதி

வடமராட்சி, ஜூன் 14

பருத்தித்துறையில் இரண்டு பொலிஸாருக்கு நேற்றுக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 15

# பெரமுனவின் ஆட்சி வெட்கக்கேடானது!

### போட்டுத்தாக்குகின்றார் சஜித்

கொழும்பு, ஜூன் 14

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை வெட்கக்கேடானது. இது ஆளுந்தரப்புக்குள் காணப்படும் பெரும் முரண்பாடுகளை வெளிப்படுத்துகின்றது – என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ. 15



## ஜனாதிபதி, பிரதமர் இணைந்தே எரிபொருளுக்கு விலை ஏற்றினர்

### சாகரவின் கருத்துக்கு கம்மன்பில பதிலடி

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்தே எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுத்தனர். இதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச எழுத்து மூலம் அனுமதி வழங்கினார். ஆதலால் பதவி விலக வேண்டியது நானல்ல இவ்வாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்த ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், இந்த விடயத்துக்குப் பொறுப்பேற்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். இதற்குப் பதிலடியாகவே கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

(விரிவான செய்தி பக்கம் 3)

## கிளி. ஆடைத் தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்படுகிறது

### கரைச்சி பிரதேச செயலர் வேழமாலிகிதன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சியில் இயங்கிவரும் இரு ஆடைத் தொழிற்சாலைகளின் ஊடாகவும் கொரோனாத் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதால் அதை தற்காலிகமாக மூடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக கிளிநொச்சியில் இயங்கும் இரண்டு 15

## கொரோனா 2,329

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 329 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனாத் 15

## வடக்கில் 27 தொற்று!

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கில் 876 பி.சி.ஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 34 பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். 15

## கொவிட் விதிமுறைகளை மீறி வடமராட்சியில் திருமண விழா

### 50 பேர் கட்டாயத்தனிமையில்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமராட்சியில் கொரோனாப் பெருந்தொற்றுக் கட்டுப்பாடுகளை மீறி நேற்று இடம்பெற்ற திருமண விழா சர்ச்சையாகியுள்ளது. இதையடுத்து சுமார் 50 பேர் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். திருமணம் தொடர்பான 15

## எரிபொருள் விலை உயர்வு: திருத்தம் செய்கிறதா அரசு?

### அமைச்சரவைக் கூட்டத்தில் இன்று முடிவு

கொழும்பு, ஜூன் 14

அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலையை மீளத் திருத்துவது தொடர்பில் அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது 15

## கம்மன்பிலவை பதவி விலக கோருவது வேடிக்கையானது

### தனது கட்சியின் செயலாளருக்கு தலைவர் மஹிந்தவே சாட்டையடி

கொழும்பு, ஜூன் 14

'எரிபொருள் விலை அதிகரிப்பு, ஜனாதிபதி தலைமையிலான எமது அரசின் தீர்மானமாகும். இந்தநிலையில், வலு சக்தி அமைச்சர் 15

## எரிபொருள் விலை அதிகரிப்பை நியாயப்படுத்துகிறார் கோத்தா!

### சர்ச்சைக்கு மத்தியில் ஊடகப்பிரிவு அறிக்கை

கொழும்பு, ஜூன் 14

உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொது வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமே, எரிபொருள் விலை அதிகரிப்புக்கான காரணம் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் நாட்டில் எழுந்துள்ள சர்ச்சைக்கு மத்தியில், ஜனாதிபதி ஊடகப்பிரிவு 15


உதயன்

செய்திகளுக்கு 021 493 0000 077 1209994

விளம்பரங்களுக்கு 021 493 1111 071 6182182




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கொரோனா இன்னமும் சமூகத்தொற்றாக மாற்றமடையவில்லை

## ஆனால் சமூகத்தில் தொற்று உள்ளது என்கிறார் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்




**கொழும்பு, ஜூன் 14**
**கொரோனாத் தொற்று சமூகத்தில் உள்ளது. ஆனால் அது சமூகத் தொற்றாக, சமூகக் கொத்தணியாக மாற்றமடையவில்லை. இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இந்த மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். 'சமூகத் தொற்று அல்லது சமூகப் பரவல் என்பது ஒரு தொழில்நுட்ப சொல்ல. சமூகத்தில் பெரும்பான்மையானவர்களுக்கு தொடர்புகள் அல்லாது தொற்று ஏற்பட்டிருப்பதையே சமூகப் பரவல் என்று கூற முடியும். ஆனால் இங்கு, தொற்று ஏற்படும் தொடர்புகளைக் கண்டறிந்து அதன் வழி நாம் தனிமைப்படுத்தல்களை மேற்கொள்கின்றோம். பரவல் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இலங்கை இன்னமும் சமூகத் தொற்று அல்லது சமூகப் பரவல் நிலையை அடையவில்லை. சமூகப் பரவல் ஏற்பட்டிருந்தால் எங்களுக்கு தொடர்புகளைக் கண்டறிந்து தனிமைப்படுத்துவதற்கு சிரமமாக இருந்திருக்கும்- என்றார் ஹேரத். (ஒ,5,இ)




# தனியார்துறையின் பி.சி.ஆர். சோதனை அதிகரிக்கவேண்டும்

கொழும்பு, ஜூன் 14
தனியார் துறையில் தற்போது 9 பி.சி.ஆர். ஆய்வுகூடங்கள் உள்ளன. அதனை அதிகரிக்கவேண்டும் என்று தனியார் மருத்துவமனை சங்கத் தலைவர் மருத்துவர் லக்கித் பீரிஸ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர். சோதனைகளை மேலும் மேலும் அதிகரித்து, தொற்றாளர்களை தனிமைப்படுத்துவது உலகளாவிய ரீதியில் கொரோனா கட்டுப்பாட்டில் மிக முக்கிய வழியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. அதற்கு அமைவாக பி.சி.ஆர். சோதனைகள் அதிகரிக்கப்படவேண்டும். இதற்கு பெரும் நிதி தேவை. அத்துடன் தொழில்நுட்ப பயிற்சி பெற்ற பணியாளர்களும் தேவை.
தனியார் செயற்படுத்தும் ஒவ்வொரு பி.சி.ஆர். ஆய்வுகூடமும் அரசின் நேர்த்தியான வலுவான ஒரு பொறிமுறைக்குள்ளேயே இயங்குகின்றது. சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் கண்காணிப்பு உள்ளது. ஒவ்வொரு பி.சி.ஆர். ஆய்வுகூடத்திலும் நுண்ணுயியல் நிபுணர் (வைராலஜிஸ்ட்) இணைக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்கொள்ளப்படும் பரிசோதனையின் தரம் மற்றும் துல்லியம் தொடர்பில் அவர் உறுதிப்படுத்தவேண்டும்.
மேலும் தனியார் ஆய்வுகூடங்களில் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படும்போது அதன் முடிவு தொற்று நோயியல் பிரிவுக்கு நேரடியாகச் செல்லும் வகையில் மென்பொருள் ஒன்று உள்ளது. அதனால் பரிசோதனை முடிவுகள் உடனுக்கு உடன் சம்பந்தப்பட்ட சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குச் செல்லும். இந்தப் பொறிமுறையின் ஊடாகவே இலங்கையில் தனியார் பி.சி.ஆர். ஆய்வுகூடங்கள் இயங்குகின்றன- என்றார். (ஒ,5,இ)

# பி.சி.ஆர். சோதனைக்குரிய உபகரண கொள்வனவில் மோசடி

## சி.ஐ.டி. விசாரணை



கொழும்பு, ஜூன் 14
கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பி.சி.ஆர். சோதனைக்குரிய உபகரண (பி.சி.ஆர். கிட்ஸ்) கொள்வனவில் மோசடி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.) ஆரம்பித்துள்ளது என கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
'பி.சி.ஆர். கிட்ஸ் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (பி.பி.ஈ. கிட்) ஆகியவை பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் கொள்வனவுசெய்வதில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பல அதிகாரிகளிடம் குற்றப் புலனாய்வுப்பிரிவு வாக்குமூலம் பதிவுசெய்துள்ளது. விரிவான விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது' என்று பொலிஸ் வட்டாரங்கள் மூலம் அறிய முடிந்துள்ளது என கொழும்பு ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (ஒ,5,இ)

# அமெ. வழங்கும் தடுப்பூசி எப்போது கிடைக்கும்?

## கைவிரிக்கும் அதிகாரிகள்

கொழும்பு, ஜூன் 14
அமெரிக்காவின் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்பட்டிருந்தாலும், அந்தத் தடுப்பூசிகள் எப்போது கிடைக்கும் என்பது பற்றி அதிகாரிகளுக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை.
அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் தினுஷா தஸ்நாயக்க இது தொடர்பில் தெரிவிக்கையில்,
அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 80 மில்லியன் தடுப்பூசிகளை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்துகொள்வதாக உறுதியளித்திருந்தார். அவ்வாறு பகிரப்படும் நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.
ஆனாலும் அவர்கள் பகிர்ந்துகொள்ளும் தடுப்பூசிகள் எப்போது இலங்கைக்குக் கிடைக்கும் என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை.
இதேவேளை, அஸ்ராஜெனகாவின் இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசு பல தரப்புக்களுடன் தொடர்ந்தும் பேச்சில் ஈடுபட்டு வருகின்றது- என்றார். (ஒ,5,இ)

# கொரோனாவால் உயிரிழந்தவர்கள் 63 ஆக அதிகரிப்பு

கொழும்பு,ஜூன் 14
இலங்கையில் கொரோனாத் தொற்றால் மேலும் 63 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதற்கமைவாக நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 136 ஆக அதிகரித்துள்ளது.
நேற்றுப் பதிவான உயிரிழப்புக்களில், 33 பேர் ஆண்கள் மற்றும் 30 பேர் பெண்கள் ஆவர். இவர்களில் வீடுகளில் 7 பேரும், மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் 9 பேரும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்கள் 47 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# கொரோனாத் தொற்று உயிரிழப்பு தரவுகளில் முரண்பாடுகள் ஏன்?

## விளக்குகிறது சுகாதாரத் திணைக்களம்

கொழும்பு, ஜூன் 14
கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படுவதில் முரண்பாடுகள் உள்ளன எனத் தெரிய வந்துள்ளது.
தொற்று நோயியல் பிரிவு வெளியிடும் இறப்புத் தொடர்பான விவரங்கள், முதல் நாளில் நிகழ்ந்த உயிரிழப்புக்களாக இல்லாமல் அது குறிப்பிட்ட காலத்துக்குரிய விவரங்களையே வெளியிடுகிறது என அறியமுடிகின்றது.
கடந்த வெள்ளிக்கிழமை தொற்றுநோயியல் பிரிவு 101பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர் எனத் தகவல் வெளியிட்டது. அந்த உயிரிழப்புக்கள் அனைத்தும் ஓர் நாளில் பதிவானவை அல்ல என்று சுகாதாரத் திணைக்களம் விளக்கமளித்துள்ளது.
கடந்த பெப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் தலா ஒவ்வொருவரும், மே மாதம் 11 பேரும், ஜூன் மாதம் 88 பேரும் உயிரிழந்திருந்தனர். அதேவேளை ஜூன் மாதத்தில் பதிவான 88 இறப்புக்களும் ஓர் நாளில் பதிவானவை அல்ல. ஜூன் முதலாம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையான உயிரிழப்புக்களின் எண்ணிக்கையே அவை.
அதிலும் ஜூன் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் இரு நாளும் தலா 27 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இந்தக் கூட்டுத் தொகையே 101 உயிரிழப்புக்கள் என்று தொற்று நோயியல் பிரிவு அறிவித்தது. 'கொரோனா உயிரிழப்பு என்று உறுதிப்படுத்தி தகவல் வெளியிடுவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையைப் பின்பற்ற வேண்டும்.
அதனால் இறப்புக்களை உறுதி செய்வதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது. அதிகாரிகளின் திறமையின்மையால் இந்தத் தாமதம் ஏற்படவில்லை' என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவ ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (ஒ.5.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களின் தீர்மானத்தையே சவாலுக்கு உட்படுத்தியது மொட்டு

## அதனால் பதவி விலகவேண்டியது நான் அல்ல மொட்டுவின் செயலர் சாகரவே என்கிறார் கம்மன்பில

**கொழும்பு, ஜூன் 14**

**ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்தே எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுத்தனர். இதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச எழுத்து மூலம் அனுமதி வழங்கினார்.**

இவ்வாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதனால் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் வெளியிட்டுள்ள அறிக்கையானது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கே எதிரானது என்றும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்த ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், இந்த விடயத்துக்குப் பொறுப்பேற்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். இது குறித்து நேற்று பிற்பகல் கொழும்பிலுள்ள எரிசக்தி அமைச்சில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் உதய கம்மன்பில விளக்கமளித்தார்.

இதன்போது எரிபொருள் விலை அதிகரிப்புக்குத் தான் பொறுப்புக்கூற வேண்டியவர் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவே தீர்மானித்தது. ஜனாதிபதி, பிரதமர், வர்த்தகத்துறை அமைச்சர் மற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ச உள்ளிட்டவர்கள் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

எனவே, இது என்னால் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு கிடையாது. எரிபொருள் விலை உயர்வு தொடர்பான அறிவிப்பை நிதி அமைச்சே வெளியிடும். எனினும், இது தொடர்பான அறிவிப்பை நானே விரும்பி வெளியிட்டேன்.

பிரதமரின் பிரதிநிதியாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பங்கேற்றிருந்தார். அரச தலைவர்களைப் பாதுகாக்கவே நான் இவ்வாறு செயற்பட்டேன்.

அத்துடன், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டம் இடம்பெறாமலேயே கட்சியின் செயலாளர் மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளார். அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்தனர். கட்சியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தவிசாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்குக்கூட இது பற்றி தெரியாது.

குறிப்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை விமர்சித்தே சாகர காரியவசம் அறிக்கை விடுத்துள்ளார்.

இதற்கான அதிகாரத்தை அவருக்கு வழங்கியது யார்? அரசின் தீர்மானத்தை விமர்சித்து அவர் தவறிழைத்துள்ளார். எரிபொருள் விலை உயர்வுக்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என்பது தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு சாகர காரியவசம் வரவேண்டும். அதற்கான சவாலை நான் விடுக்கின்றேன். எனவே, நான் பதவி விலக வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தீர்மானத்தை எதிர்க்கும் அவர்களின் கட்சி செயலாளரான சாகர காரியவசமே பதவி விலக வேண்டும்- என்றார். (ஓ.5,22)

# மலையக அரசியல் தலைமைகள் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 14

"ஈழத்தமிழர்களை குறிவைத்த அரசு தற்போது மலையக மக்களையும் ஒடுக்குவதற்கு முற்படுகின்றது. எனவே, மலையக அரசியல் தலைமைகள் விழிப்பாக இருக்கவேண்டும். தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும். அவ்வாறு நடந்தால் இணைந்த பயணம் என்பது சாத்தியப்படும்." என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாட்டால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டம்- மஸ்கெலியா பகுதிகளில் உள்ள மக்களுக்கான நிவாரணத் திட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று முன்னெடுத்திருந்தது.

இதன்போது மலையக கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது கருத்தாகும். மலையக மற்றும் முஸ்லிம் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகள் கடந்தகாலங்களிலும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், கொள்கை ரீதியிலான முரண்பாட்டால் பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு வரமுடியவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு, கிழக்கில் வாழும் ஈழத்தமிழ் மக்கள் கடந்த 73 ஆண்டுகளாக எவ்வாறெல்லாம் குறிவைக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டனவோ, மேற்படி அனைத்து நடவடிக்கைகளும் இன்று மலையக மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இந்தநிலைமையை உணர்ந்து, மலையக மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களோடு ஒரு பொதுநிலைப்பாட்டை எடுத்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்தில் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டால் இணைந்து செயற்படுவதில் எந்த பிரச்சினையும் இல்லை."- என்றார். (கு-44)

## ஜி.எஸ்.பி. சலுகையை இழந்தால்

# டொலருக்கு நிகரான பெறுமதி 300 ரூபாவாக அதிகரிக்கும்!!!

## ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 14

ஜி.எஸ்.பி. சலுகையை இலங்கை இழக்குமாயின், தேசிய பொருளாதாரம் படுபாதாளத்தில் விழும். எனவே அரசியல் காரணிகளுக்கு அப்பால் சென்று, நாட்டு மக்கள் மற்றும் நாட்டின் எதிர்காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடி ஜி.எஸ்.பி. சலுகையை தக்கவைத்துக்கொள்ள அரசு முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைப் பெற்று, நாம் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தினோம். ஆடைத் தொழிற்துறை, மீன் பிடித்தொழில் ஆகியவை இதனால் மேம்படுத்தப்பட்டன. ஆனால் இன்று ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் பிரச்சினை உருவாகியுள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை அற்றுப்போகக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இன்று எமது சுற்றாடற்றுறை சார் வணிகச் செயற்பாடுகள் இல்லாமல் போயுள்ளன. அதேபோன்று மீன்பிடித்தொழிற்றுறையும் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்வோர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. எம்மிடம் நிதியின்மையால் பங்களாதேஷிடம் கடன்பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது எமக்கு ஆடைத்தொழிற்துறை மற்றும் தேயிலைத் தொழிற்துறை மாத்திரமே எஞ்சியுள்ளன. இந்தநிலையில் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை நீக்கப்படுமாயின், அந்நியச் செலாவணி குறைவடையும். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து, டொலரின் பெறுமதி 300 ரூபா வரை அதிகரிக்கக்கூடும். வேலை வாய்ப்புக்கள் அற்றுப்போகும். எனவே ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பாதுகாப்பதற்கு அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்- என்றார். (ஏ-4)



# சமஷ்டி முறை வந்தால் மலையக மக்களின் இருப்பும் காக்கப்படும்!

## கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

"ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும். அதற்காகவே நாம் போராடி வருகின்றோம். சமஷ்டி முறை வருகின்ற போது மலையக மக்களின் இருப்பும் பாதுகாக்கப்படும்." என்று தமிழ்த் தேசியக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாட்டால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டம் மற்றும் மஸ்கெலியா பகுதிகளில் உள்ள மக்களுக்கான நிவாரணத் திட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று முன்னெடுத்தி ருந்தது.

அதன்போது கஜேந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, சீனாவின் முகவர்களாக செயற்பட்டு நாட்டின் வளங்களை விற்கின்றது. பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு உயரும் வகையில் செயற்பட்டு வருகின்றது. மக்கள் நலன் பற்றி சிந்திப்பதில்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் இவ்வாறு எரிபொருள்களின் விலை உயர்வடைந்திருக்காது.

செலன இணைந்த நிறுவன திட்டத்தின் ஊடாக கொழும்பிலுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களை சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. தென்பகுதியை தாரைவார்ப்பது மட்டுமல்லாமல் வடக்கில் காங்கேசன்துறையில் 7 ஏக்கர் காணியிலுள்ள ஜனாதிபதி மாளிகையை யும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். " என்றனர். (த-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் மீண்டும் தலைதூக்கும் அபாயம்

கொடிகாமம், ஜூன் 14

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இவ்வாரம் கைதடியில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் அடையாளம் காணப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.



இது தொடர்பில் அந்தப் பணிமனையினர் தெரிவிக்கையில்;

இம்மாதம் அடிக்கடி மழை பெய்து வருவதால் எமது பிரதேசங்களில் உள்ள பல வீடுகளிலும் பொது இடங்களிலும் டெங்கு நுளம்பின் குடம்பிகள் உற்பத்தியாகி வருவதைத் தொடர்ச்சியாக அவதானிக்க முடிகின்றது. கொவிட் - 19இன் மீது எல்லோரது கவனமும் குவிந்துள்ள போது, டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் தமக்கு ஏற்பட்ட காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் கொவிட் 19 - க்கு உரியதாக இருக்கலாமெனக் கருதி, பி.சி.ஆர். பரிசோதனை மீதான தவறான புரிதல் காரணமாக மருத்துவமனைக்கு உடனடியாகச் செல்வதை தவிர்த்து விடுவதற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. இவ் அணுகுமுறை நோய் நிலைமையை மேலும் அதிகரித்து உயிரிழப்புகளை ஏற்படுத்திவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே இந்நாள்களில் ஏற்படும் சகல நோய் அறிகுறிகளும் மிகுந்த கரிசனையுடன், அணுகப்பட வேண்டியவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். பொது மக்கள் தமது வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்க வேண்டும் - என்றனர். (ப-159)

# தீவிரமடைகின்றது டெங்குக் காய்ச்சல்

## மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக, மீண்டும் டெங்கு நோய் பரவல் தீவிரமடையும் நிலை உருவாகியுள்ளது என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மாதத்தின், கடந்த சில தினங்களில் மாத்திரம் 184 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 888 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்தநிலையில், வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 8 ஆயிரத்து 031 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் அந்தப்பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாட்டின் பல மாவட்டங்களில் பதிவாகக் கூடிய அச்சுறுத்தல் நிலவுகின்றது என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார். (து-இ)

# தடுப்பூசி வழங்காவிட்டால் மருந்தகங்கள் திறக்கமாட்டோம்

## தனியார் மருந்தகங்கள் மிரட்டல்

கொழும்பு, ஜூன் 14

தனியார் மருந்தகங்களின் ஊழியர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்த வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் மருந்தகங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் ஊடகச் செயலாளர் சிதத் சுரங்க தெரிவிக்கையில்,

மருந்தகங்களில் பணிபுரிபவர்கள் அடிக்கடி கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருப்பவர்களைச் சந்திக்க நேரிடுவதால், அவர்களுக்கு கட்டாயமாக தடுப்பூசி செலுத்த் வேண்டும். பயணத்தடைக் காலப்பகுதியிலும் மருந்தகங்களைத் திறந்து, பொதுமக்களுக்கு சேவையாற்றிவரும் மருந்தக ஊழியர்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சருடன். கலந்துரையாடியபோதும், இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. கொரோனாத் தொற்றால் மருந்தக உரிமையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு மருந்தாளர்களுக்கும் தடுப்பூசி விவகாரத்தில் முன்னுரிமை வழங்க வேண்டும் - என்றார். (எ-4)

# பாடசாலைகளை ஆரம்பிக்க ஆசிரியர்களுக்குத் தடுப்பூசி


## மருத்துவ அதிகாரிகள் பரிந்துரை



கொழும்பு,ஜூன் 14

கொரோனாத் தொற்றால் முடக்கப்பட்டுள்ள பாடசாலைகளை, மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமானால், அடுத்த மாதத்துக்குள் ஆசிரியர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்று அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்தினால், இறப்புகளின் எண்ணிக்கையை 90 சதவீதம் குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)



# 10 வீதமானோர் தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, ஜூன் 14

இலங்கையின் சனத்தொகையில் ஏறத்தாழ 10 வீதமானோருக்கே இதுவரை கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

அதனடிப்படையில் 21 லட்சத்து 99 ஆயிரத்து 504 பேர் முதலாவது தடுப்பூசியையும், 4 லட்சத்து 33 ஆயிரத்து 202 பேர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# தாதியர்கள் அடுத்தவாரம் மீண்டும் வேலைநிறுத்தம்

கொழும்பு,ஜூன் 14

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மீண்டும் அடுத்த வாரம், தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று இலங்கை தாதியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் மருத்துவமனைகளில் தொடர்ந்து கடமையில் ஈடுபட்டுவரும் தாதியர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், வாக்குறுதியளிக்கப்பட்டவாறு இடைக்கால கொடுப்பனவை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே மீண்டும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உடனடியாக தலையீடு செய்து, எமது கோரிக்கைளை நிறைவேற்றாவிடில், அடுத்த வாரம் நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று சங்கத்தின் பொதுச்செயலாளர் எச்.எம்.எஸ்.பி மெதிவத்த தெரிவித்துள்ளார். (எ-4)

# சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு கொரோனா இடர் கொடுப்பனவு

## கோருகிறது பொதுச் சேவைகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 14

சுகாதாரத்துறையின் அனைத்துப் பணியாளர்களுக்கும் தற்போதைய கொரோனா இடர் காலக் கொடுப்பனவாக மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா வழங்குமாறு அரச பொதுச் சேவைகள் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் நிதி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ச மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அந்தச் சங்கம் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் நிலைமைக்கு மத்தியிலும் தமது உயிரை துச்சமென மதித்து அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் சுகாதாரத் துறையின் அனைத்து தர பணியாளர்களுக்கும் விசேட கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபா மாதாந்தம் வழங்கப்படவேண்டும். அதனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை அதிகரிப்பு ஐ.ம.சக்தி எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, ஜூன் 14
எரிபொருள்கள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, குருநாகல் நகரில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.சி.அலவதுவலவின் ஏற்பாட்டில், அமைதியான முறையில், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
அரசு எரிபொருள்களின் விலையை அதிகரித்து, நாட்டு மக்களின்மீது பொருளாதாரச் சுமையை ஏற்றியுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஏ-4)

# குறைபாடுகளை மறைக்கவே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 14
கொரோனாத் தொற்றுக் காலத்தில், அரசு தன்மீதுள்ள குறைபாடுகளை மறைப்பதற்காகவே நாடு முழுவதும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என்று ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.
இது தொடர்பில் ஜே.வி.பியின் உறுப்பினர் டில்வின் சில்வா தெரிவிக்கையில்,
எரிபொருள்கள் விலை அதிகரிப்புக்கு எழக்கூடிய கடும் எதிர்ப்பையும், விமர்சனங்களையும் ஒடுக்குவதற்காகவும், தன்மீதான குறைபாடுகளை மறைப்பதற்காகவும் அரசு போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
ஆடைத் தொழிற்சாலைகள், அரச அலுவலகங்கள், சிறிய வர்த்தகங்கள், சில கடைகள் தொடர்ந்தும் இயங்குகின்றன. சாதாரண மக்களே முடக்கப்பட்டுள்ளனர். இதனால் அரசு அரசியல் எதிராளிகளை ஒடுக்க முயல்கின்றது - என்றார். (ஏ-4)

# தங்கத்தின் விலை மேலும் எகிறும்



கொழும்பு, ஜூன் 14
அடுத்த சில மாதங்களில், உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரிக்கக் கூடும்என்று பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
உலகளாவிய ரீதியில் பணவீக்கம் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம்.
அமெரிக்காவின் பணவீக்கம் 13 ஆண்டுகளில் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளதால், தங்கத்தின் விலை மீண்டும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஏ-4)

# விலைச் சுமைகளை ஏற்றி நசுக்குகின்றது அரசாங்கம்

## ஜே.வி.பி. விசனம்



கொரோனாத் தொற்றால் பொதுமக்கள் நாளாந்தம் வாழ்வதற்குத் திண்டாடிக் கொண்டிருக்கும் தருணத்தில், மேலும் விலைச்சுமைகளையும் சுமத்தி, அவர்களைத் துன்புறுத்தவேண்டாம் என்று ஜே.வி.பி வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிக்கையில்,
மக்கள் வாழ்வதற்கு வழியில்லாமல் நெருக்கடியில் இருக்கும்போது, அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பல மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன.
போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையிலும், அத்தியாவசியப் பொருள்களின் விலை வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது. இதற்குள் எரிபொருள் விலை அதிகரிப்பு மக்களை மேலும் துன்புறுத்தும்.
எரிபொருள் விலை அதிகரிப்பால் அனைத்துத் துறைகளும் பாதிக்கும். இவற்றை மக்களால் தாங்க முடியாது. பொதுமக்களின் நன்மைக்காக எரிபொருள் விலையை ஸ்திரப்படுத்தும் நிதியத்தின் நிதியை ஏன் அரசு இந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தவில்லை. அந்த நிதியத்துக்கு என்ன நடந்தது - என்றார். (ஏ-4)

# மஹிந்த அணியினர் படங்காட்ட சபைக்கு சைக்கிளில் வரக்கூடும்

## மக்களுக்கு ஞாபகப்படுத்துகிறார் இம்ரான் எம்.பி.

**கொழும்பு, ஜூன் 14**
**"எரிபொருள்களின் விலை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பல கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கவுள்ளனர். இதனைக் கண்டித்து பிரதமர் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அடுத்த நாடாளுமன்ற அமர்வுக்கு சைக்கிளில் வருவார்கள் என எதிர்பார்க்கின்றேன்" என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,
எமது கடந்த அரசின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் விலை சூத்திரத்துக்கமைய நியாயமான எரிபொருள் விலையேற்றம் இடம்பெற்றபோது அதற்கெதிராக தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர் நாடாளுமன்ற அமர்வுக்கு சைக்கிளில் வருகைதந்தனர்.
எரிபொருள் விலையேற்றத்தால் மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்றும் அந்த விலையேற்றத்தை எதிர்த்தே சைக்கிளில் நாடாளுமன்றம் வந்தோம் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்.
தற்போது இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் மிக வேகமாக பரவிவருவதால் அதனை அனைவரும் விளங்கிக்கொண்டுள்ளோம்.
அன்று மக்களுக்காக சைக்கிளில் மற்றும் மாட்டு வண்டிகளில் நாடாளுமன்றம் வந்தவர்கள் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அதனைச் செய்வார்களா? என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.
இவர்களது ஏமாற்று அரசியல் குறித்து அடுத்த நாடாளுமன்ற அமர்வுவரை மக்கள் பொறுத்திருந்து பார்க்க முடியும்.
எரிபொருள் விலையேற்றத்தால் போக்குவரத்துச் செலவு உட்பட சகல பொருள்களினதும் விலைகள் அடுத்தடுத்து அதிகரிக்கப்படவுள்ளன. இதனால் தாங்க முடியாத சுமையை மக்கள் தாங்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
நாம் எரிபொருள் விலையைக் குறைத்து அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 100 வீதம் அதிகரித்தோம். மருந்துப்பொருள்களின் விலை உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்தோம். இதனால் மக்களின் சிரமங்களில் பெருமளவு குறைந்தது.
அரசு என்ற அடிப்படையில் எல்லோரும் சேர்ந்து எரிபொருள் விலையேற்றத் தீர்மானத்தை எடுத்துவிட்டு இன்று குறிப்பிட்ட அமைச்சர் மீது குற்றத்தை சுமத்துகின்ற அநாகரிக அரசியல் இடம்பெறுவது குறித்து வேதனைப்படுகின்றேன்.
இந்த நாட்டிலுள்ள மக்கள் கல்வி அறிவு கூடியவர்கள். நன்கு சிந்திக்கும் திறன் உள்ளவர்கள். எனவே, இதுபோன்ற வெட்கமில்லாத காரணங்களைக் கூறி அவர்களை ஏமாற்றும் செயன்முறையை அரசு கைவிட வேண்டும். தற்போதைய பொருத்தமற்ற எரிபொருள் விலையேற்றத்தை உடன் குறைக்க வேண்டும் - என்றார். (கு-இ)

# பேக்கரி உணவுகளின் விலையும் அதிகரிக்கும்



கொழும்பு, ஜூன் 14
எரிபொருள்களின்விலை அதிகரிப்புக் காரணமாக, அனைத்து பேக்கரி உற்பத்திகளின் விலைகளையும் அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவிக்கையில்,
எரிபொருள் விலை போன்று பேக்கரி உற்பத்திக்குத் தேவையான ஏனைய மூலப்பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது.
விசேடமாக கோதுமை மாவின் விலை எதிர்வரும் தினத்தில் அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் பேக்கரி உற்பத்திகளின் விலையையும் அதிகரிக்க நேரிடும் - என்றார். (ஏ-4)

# பேருந்துக் கட்டணத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 14
எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையால், பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு, அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.
அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் மற்றும் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஆகியவை இணைந்து ஊடக சந்திப்பொன்றை நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்தன.
இதில் கலந்துகொண்ட அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் அஞ்சன பிரின்ஜித் தெரிவிக்கையில்,
தற்போதைய டீசல் விலை உயர்வு காரணமாக 15 வீத பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. எனினும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக, ஆசனங்களுக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டுமானால், கட்டாயமாக 25 வீத கட்டண அதிகரிப்புக்குச் செல்ல நேரிடும் - என்றார். (ஏ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் வீட்டு வன்முறைகளும் அதிகரிப்பு

## வன்முறைக்கு எதிரான தேசிய மன்றம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 14**

**நாட்டில் நடைமுறையிலுள்ள பயணக்கட்டுப்பாடுகளுக்குள், வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எனவே இவற்றைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்**

இவ்வாறு பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான தேசிய மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்த மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், இலங்கை உள்ளிட்ட நாடுகள் பயணக் கட்டுப்பாடுகள், வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் ஆகிய திட்டங்களை முன்னெடுத்துள்ளன.




இந்த நடவடிக்கைகள் நேரடியாக வீட்டு வன்முறைகளை பன்மடங்கு அதிகரித்திருப்பதற்கு வழிவகுத்துள்ளன. வன்முறைகள் வெளிக்காட்டப்படுவதில்லை. நீதிமன்றங்களையும் நாட முடியாது. வீட்டுக்குள்ளேயே வன்முறைகளும் முடங்குகின்றன. எனினும் இந்தக் காலத்தில் இடம்பெறும் வன்முறைகளின் தாக்கம் நீண்டகால சமூக, பொருளாதாரச்செலவுகள் மற்றும் தலைமுறைகளுக்கு இடையிலான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். அரச மற்றும் துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (எ-4)

# தனிமைப்படுத்தலை கண்காணிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர்

கொழும்பு, ஜூன் 14
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுவோரைக் கண்காணிப்பதற்கு, சிறப்பு இராணுவப் புலனாய்வுக்குழுவினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தனிமைப்படுத்தல் சட்டங்கள் மீறப்படும் இடங்கள் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்க வேண்டியது இந்தக் குழுவினரின் பொறுப்பு. அதற்கமைவாக இந்தக் குழுவினர் கிராமங்களில் கண்காணிப்பில் ஈடுபடுவர்.
பயணக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ள கால கட்டத்தில் பலரின் செயற்பாடுகள் திருப்திகரமாக உள்ளன.
எனினும் ஒரு சிலரது நடவடிக்கை வருந்தத்தக்கது. அதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய தேவைகளைத்தவிர வேறு எந்த காரணத்துக்காகவும் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளோம். நாட்டை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவது மக்களின் கைகளில் உள்ளது.
மக்கள் சரியான முறையில் செயற்பட்டால், நாட்டை உரிய திகதியில் வழமைக்குக் கொண்டுவர முடியும்- என்றார். (எ-4).



# 1,353 பேர் கைது

கொழும்பு, ஜூன் 14
தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் ஆயிரத்து 353 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சரியான முறையில் முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடந்தமை ஆகிய குற்றச்சாட் டுக்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அதேவேளை பயணக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-4)

# போர்க் குற்ற விசாரணைக்கு ஐ.நா.வின் தலையீடு அவசியம்

## டென்மார்க் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 14
இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணையை மேற்கொள்வதற்கு, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் என்று டென்மார்க் வலியுறுத்தியுள்ளது.
ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பான அவசர கூட்டத்தில், டென்மார்க் நாட்டைச் சேர்ந்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் நிக்கோலாய் விலும்சன் இதனை வலியுறுத்தியுள்ளார்.
இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படுவது என்பது புதிதல்ல. பல தசாப்த காலமாக தமிழ் மக்களின் மனித உரிமை மற்றும் சுதந்திரம் என்பவை மறுக்கப்பட்டு வருகின்றன. விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற இறுதிப்போரில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களை சுதந்திரமாக விசாரணைசெய்வதற்கு, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை இலங்கை அனுமதிக்கவேண்டும். இதனை ஐரோப்பிய ஒன்றிய நாடாளு மன்றம் மூலமாகத் தெரிவிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)



# போர்ட் சிட்டிக்கு பாதுகாப்பில்லை?

கொழும்பு, ஜூன் 14
போர்ட் சிட்டி என்ற கொழும்பு துறைமுக நகரத்துக்கு, பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உள்ளமை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.
தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம் நடத்திய மெய்நிகர் விவாதத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.
அதேவேளை துறைமுக நகரம் ஒரு பொருளாதார மையமாகவும், இந்தியக் கடலில் ஒரு கடல் மையமாகவும் வளர்ந்து வரும் போது, அதன் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு முன்னுரிமை அவசியம் என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)

# மூன்று மாதங்களுக்கு மட்டுமே அந்நியச் செலாவணி கையிருப்பு

## மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14
இலங்கையில் அடுத்த மூன்று மாதங்களுக்குத் தேவையான இறக்குமதிகளுக்கு செலுத்துவதற்கு மாத்திரம் போதுமான அந்நியச் செலாவணியே கையிருப்பில் உள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
அதனடிப்படையில் நான்கு பில்லியன் டொலர் நிதி மட்டுமே கையிருப்பில் உள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர தெரிவித்துள்ளார்.
சீனாவின் மத்திய வங்கியிடம் இருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி பரிமாற்ற வசதிகளுக்காக கிடைத்தது. இந்த நிதி நாட்டுக்கு ஒரு மாதத்துக்கு தேவையான இறக்குமதிக்கு மாத்திரமே போதுமானது.
இதனைத் தவிர இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிடம் இருந்து அந்நியச் செலாவணி பரிமாற்ற வசதிகள் கிடைத்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 780 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சந்தி சிரிக்கும் ஆட்சிக்கேடு

இத்தனை காலமும் இருந்த நிர்வாகச் சீர்கேடுகள் அனைத்தும் மாறிவிடும் என்ற விம்பத்துடன், சிறந்த நிர்வாகி என தேர்தல் காலத்தில் முன்நிறுத்தப்பட்ட கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நடப்பவை "சந்தி சிரிக்கும்" வகையில் சென்று கொண்டிருக்கின்றன.


நேற்றுமுன்தினம் இரவு சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு, எரிபொருள் விலையேற்றத்தை அறிவித்ததில் இருந்து இப்போதுவரை நடப்பவை எல்லாம் மேற்சொன்ன வகையிலேயே நடக்கின்றன. கொரோனா பேரிடரின்போதும், நாட்டிலும், நாட்டைச் சூழவும் நடக்கும் அனர்த்த நிலைமைகளின்போதும் அரசின் செயற்பாடுகள் திருப்தி தரும் வகையில் இல்லை என்று சுட்டிக்காட்டப்படும் நிலையில், எரிபொருள் விலையேற்ற விவகாரம், எதையும் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே அதிகாரத்தில் உள்ளவர்கள் இருக்கின்றனர் என்பதை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியே இப்போது நாட்டில் நடைபெறுகின்றது. அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்தவரே இப்போது நாட்டின் ஜனாதிபதியாக உள்ள நிலையில், அந்தக் கட்சியின் தலைவரே நாட்டின் பிரதமராகப் பதவி வகிக்கின்றார். அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் எவரேனும் அரசின் முடிவுகளுக்கு செவி சாய்க்காவிட்டால் அவர்களை அகற்றக் கூடிய வல்லமை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இருக்கின்றது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு எரிபொருள் விலையேற்றத்தை அறிவித்த பின்னர், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளருடன் எரிபொருள் விலையேற்றத்துக்குக் கண்டனம் வெளியாகின்றது. துறைசார் அமைச்சரை பதவி விலக்க வேண்டும் என்றும் கோரப்படுகின்றது. இது வேறெங்கிலும் நடக்காத விசித்திரம் என்பதோடு, பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் மக்களைப் படுமுட்டாள்களாக்கும் செயற்பாடே அன்றி வேறில்லை.

இப்போதுள்ள கொவிட் தொற்று நிலைமையில், மக்களை மேலும் மேலும் குழப்பத்துக்குள்ளாக்கி தாங்கள் நினைப்பவற்றை நடத்திக்கொள்ளும் அரசின் குயுக்தியின் வெளிப்பாடாகவும் இதை நோக்கலாம். கொவிட் தொற்று நிலைமைக்குள் கொழும்புத் துறைமுக சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டது போன்று, எரிபொருள் விலையேற்ற விவகாரத்திலும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி கவனத்தைத் திசை திருப்பி தப்பித்துகொள்ள முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்க முடியாது.

இவ்வாறான குளறுபடிகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும். இப்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் துன்பப்படுத்தும் விதத்தில் அரசு செயற்படக்கூடாது. தங்கள் அரசியல் தகிடு தத்தங்களை ஒதுக்கி வைத்துவிட்டு இதயசுத்தியுடன் செயற்பட வேண்டிய அவசியமான கால கட்டத்தில் இப்போது இருக்கின்றோம். இதையெல்லாம் அதிகாரத்தில் உள்ளவர்களும், அரசியல்வாதிகளும் உணர வேண்டும். ஆனால் உணர்ந்துகொள்வார்களா என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வி.



# ஒத்துழைப்பற்ற அதிகாரிகளை உடனடியாக பதவிநீக்க முடிவு



**கொழும்பு, ஜூன் 14**

**அமைச்சுக்களின் அபிவிருத்தி பணிகளுக்கு அக்கறை காட்டாத மற்றும் ஒத்துழைப்புகளை வழங்காத அதிகாரிகள், உடனடியாக பதவிகளில் இருந்து நீக்கப்படுவர் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்துள்ளார்.**

அமைச்சுக்களின் செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களின் பிரதான அதிகாரிகள் பயணக் கட்டுப்பாடுகளைக் காரணம் காட்டி வீடுகளிலேயே தங்கியுள்ளனர். எந்தப் பணிகளையும் செய்வதில்லை. எனினும் அனைவரும் சம்பளத்தை மாத்திரம் பெற்றுக் கொள்கின்றனர் என்று அமைச்சர்கள் பலர் செய்த முறைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நாடு அல்லது அமைச்சின் முன்னேற்றத்துக்காக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளாத அதிகாரிகள் பற்றிய தகவல்களை வழங்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். (ஏ-4)

# எதிரணி முதல்வரிசையில் ரணிலுக்கு ஆசனம் ஒதுக்கீடு

## ஜூன் 22 பதவியேற்பார்

கொழும்பு, ஜூன் 14

முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு, நாடாளுமன்றின் எதிரணி முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்படும். எதிர்வரும் 22 ஆம் திகதியன்று அவர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த பொதுத்தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தது. அந்த ஆசனம் நிரப்பப்படாமலே இருந்தது. இந்த நிலையில், கட்சியின் தலைவரையே நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்கு செயற்குழு கடந்தவாரம் தீர்மானித்திருந்தது.

அதனடிப்படையிலேயே, எதிர்வரும் 22 ஆம் திகதியன்று அவர், சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார். அவருக்கு எதிரணியின் முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றின் மூத்த உறுப்பினர், கட்சியொன்றின் தலைவர் என்றவகையில் மற்றும் முன்வரிசையிலேயே அவருக்கு ஆசனம் ஒதுக்கப்படவுள்ளது.

அதற்கமைவாக ஜே.வி.பியின் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அருகிலுள்ள ஆசனம் ரணிலுக்காக ஒதுக்கப்படவுள்ளது என்று அறியமுடிகின்றது. (ஏ-4)

# தொலைக்கல்வி 60 வீதம் தோல்வி

## ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள தொலைக்காணொலி மூலமான கல்விமுறை 60 வீதம் தோல்வி அடைந்துள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில், தொலைக்காணொலி மூலமான கல்வி முறைமை தொடர்பில் அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களில் தொலைக் காணொலி கல்வி முறைமையில் நிலவும் நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு இல்லை. நாட்டின் பல பகுதிகளில் தொலைத்தொடர்பு வசதி இன்மையால் மாணவர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதற்காக மாணவர்கள் மரங்களின் மீதும், வீட்டுக்கூரைகளின்மீதும் ஏறும் நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஏ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. குடிதண்ணீர் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுங்கள்

## மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 14**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நிறைவேறாத திட்டங்களில் ஒன்றாக நகரத்துக்கான குடிதண்ணீர்த் திட்டம் காணப்படுகின்றது. அந்தத் திட்டத்தை சம்பந்தப்பட்டவர்கள் விரைவுபடுத்தி நிறைவேற்ற வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் முல்லைத்தீவு நகரத்துக்கான குடிதண்ணீர் வழங்கல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இதுவரை வேலைகள் நிறைவுசெய்யப்படவில்லை. வற்றாப்பளை கிராமத்தில் குழாய்க் கிணறுகளில் இருந்து முல்லைத்தீவு நகரத்துக்கு குடிதண்ணீர் கொண்டுசெல்வது என முடிவுகள் எடுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வற்றாப்பளையில் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து குடிதண்ணீர் கொண்டு செல்லப்பட்டால் தண்ணீரூற்று, வற்றாப்பளை மற்றும் முள்ளியவளை போன்ற பல கிராமங்களின் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மதவாளர்சிங்கம்குளம் மற்றும் கணுக்கேணிக்குளம் என்பவை முல்லைத்தீவு நகரத்துக்கான குடிதண்ணீருக்கான நீர் மூலகங்களாக அடையாளப்படுத்தப்பட்டன.

குளங்களில் இருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் இணக்கம் தெரிவித்திருந்தது. இதனைவிட நந்திக் கடலில் வீணாகக் கலக்கின்ற நன்னீரை குடிதண்ணீர் திட்டத்துக்குப் பயன்படுத்தலாம் என்ற யோசனைகளும் தெரிவிக்கப்பட்டன. ஆனால் இன்று வரை முல்லைத்தீவு நகரத்துக்கான குடிதண்ணீர் வழங்கல் வேலைகள் நிறைவுசெய்யப்படவில்லை.

குடிதண்ணீர் திட்டத்துக்காக வீதிகளில் வெட்டப்பட்ட குழிகள் விபத்துகளுக்கு முக்கிய காரணமாக இருக்கின்றன. இந்நிலையில் முல்லைத்தீவு நகரத்துக்கான குடிதண்ணீர் திட்டத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவுபடுத்த வேண்டும்- என்றனர். (ப-13)



# பாணினுள் போத்தலின் மூடி; பேக்கரிக்கு எதிராக வழக்கு

வவுனியா, ஜூன் 14

வவுனியாவில் விற்பனைசெய்யப்பட்ட பாணில், போத்தல் ஒன்றின் மூடி காணப்பட்டதையடுத்து குறித்த பேக்கரிக்கு எதிராக சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, பட்டக்காடு பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றில் உற்பத்திசெய்யப்பட்ட பாண்களை, வாகனத்தில் எடுத்துச்சென்று விற்பனையில் ஈடுபட்டபோது, வேப்பங்குளம் பகுதியில் வாகனத்தை மறித்த ஒருவர் அந்தப் பாண்களில் ஒன்றை வாங்கியுள்ளார்.

வாங்கிய பாணை உண்பதற்காக எடுத்தபோது அதனுள் பிளாஸ்ரிக் போத்தல் ஒன்றின் மூடி இருந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து வவுனியா சுகாதாரப் பிரிவினருக்கு குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது. , பாணும் சுகாதாரப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைப் பெற்று முறைப்பாட்டைப் பதிவுசெய்த சுகாதாரப் பிரிவினர், கொவிட் அச்சுறுத்தல் காலப்பகுதியில் வழங்கப்பட்ட பாஸ் அனுமதியைக் கொண்டு சுகாதாரச் சீர்கேடான முறையில் குறித்த பேக்கரி செயற்பட்டுள்ளது என்று தெரிவித்து, பேக்கரிக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்துள்ளனர். (ப-18)



# ஆலயத்தின் முன்பாக கோழி விற்பனை; பயணத்தடைக் கால 'பாஸ்' பறிமுதல்

வவுனியா, ஜூன் 14

வவுனியாவில் ஆலயத்தின் முன்பாக நின்று, கோழி விற்பனையில் ஈடுபட்டவரின் பயணத்தடைக் கால அனுமதிப்பத்திரம் பறிமுதல்செய்யப்பட்டுள்ளது. பயணத்தடைக் காலப்பகுதியில் மக்களின் வீடுகளுக்குச் சென்று கோழி இறைச்சி விற்பனை செய்யப்படும் என்று பிரதேச செயலகம் ஊடாக அனுமதியைப் பெற்று, வவுனியா, குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் வாகனத்தை நிறுத்தி வைத்து கோழி விற்பனை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் சுகாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, அங்கு சென்ற பொலிஸார் பயணத்தடைக் காலத்தில் மக்களின் வீடுகளுக்குச் சென்று கோழி விற்பனைக்கு வழங்கப்பட்டிருந்த பாஸ் அனுமதிப்பத்திரத்தை பறிமுதல் செய்தனர். (ப-18)

# பிள்ளையார் ஆலயம் இடிக்கப்பட்டதற்கு கண்டனம்

கொடிகாமம், ஜூன் 14

மிருசுவில் பகுதியில் ஏ 9 வீதியில் அமைந்திருந்த பிள்ளையார் ஆலயம் இடிக்கப்பட்டமைக்கு இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் வீதியோரத்தில் அமைந்திருந்த மிகவும் பழமையான பிள்ளையார் ஆலயம் கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பயணக் கட்டுப்பாடு நடைமுறையிலிருந்தபோது டிப்பர் வாகனத்தால் இடித்து அழிக்கப்பட்டமை சைவமக்கள் மத்தியில் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளதோடு, இளையோர் மத்தியில் பெரும் ஆவேசத்தை ஏற்படுத்தியுள்ளது. சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக இவ் ஈனச்செயலைச் செய்தவரை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி, தகுந்த தண்டனை வழங்க வேண்டும்- என்றுள்ளது. (ப-159)



# நிரந்தரமாக குடிதண்ணீரைப் பெற உடன் நடவடிக்கை எடுங்கள்

## தென்னியன்குளம் கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு தென்னியங்குளம் கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

துணுக்காய் பிரதேச சபையால் ஆண்டுதோறும் ஜூன், ஜூலை, மற்றும் ஓகஸ்ட் ஆகிய மாதங்களில் எமது கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவது வழமையாகும்.

பிரதேச சபையிடம் இவ்வாண்டு குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் வாகன வசதி இல்லாததால், தென்னியங்குளத்துடன் சேர்த்து எட்டுக் கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறவில்லை. இதனால் தென்னியங்குளம் கிராமத்தில் தற்போது குடிதண்ணீர் நெருக்கடி எதிர்கொள்ளப்படுகின்றது. குடிதண்ணீருக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டி உள்ளது. எனவே குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு துணுக்காய் பிரதேச செயலகம், மற்றும் துணுக்காய் பிரதேச சபை ஆகியவை இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்- என்றனர். (ப-13)

# சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி, உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்த கிளிநொச்சி பொலிஸார், சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் தெரிவித்தனர். (ப-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் காற்றுடன் கூடிய மழையால் யாழில் 17 குடும்பங்கள் பாதிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 14**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென நிலவிய காற்றுடன் கூடிய மழை காரணமாக 17 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ, உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.**

"யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் 10 மணி வரை கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவியது. இதன் தாக்கத்தால் 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, மூன்று சிறு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினரால் சேகரிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-26)





## பொதுத்தேர்வுப் பரீட்சை; 4500 மாணவர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

அனைத்துலக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் பன்னாட்டளவில் நடத்தப்படும் பொதுத்தேர்வுப் பரீட்சை நேற்று பல்வேறு நாடுகளில் சிறப்பாக நடைபெற்றது.

இப் பரீட்சையில், தமிழ்க் கல்விக் கழகம் - ஜேர்மனியின் நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் இயங்கும் 100க்கும் மேற்பட்ட தமிழாலயங்களில் தாய்மொழியைப் பயிலும் 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர்.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 12 வரையான வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பரீட்சை எழுதியுள்ளனர். பரீட்சை ஜேர்மனியில் 90 நிலையங்களில் நடைபெற்றது. நிறைவுபெறும் இக் கல்வியாண்டு முழுவதும் கொவிட் - 19 நோய்த்தொற்றுக் காரணமாக தமிழாலயங்கள் மூடப்பட்டு இருந்த நிலையிலும், நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் அயராத உழைப்பால், கற்பித்தல் முயற்சிகள் தொடர்ந்தும் இயங்குநிலையை இழக்காததால், நடைபெற்ற பரீட்சையில் மாணவர்கள் தங்கள் மொழித்திறனை மீண்டும் வலுவேற்றியுள்ளனர். பரீட்சை எழுதிய மாணவர்களின் விடைத்தாள்கள் எதிர்வரும் வாரங்களில் புள்ளிகள் வழங்கி தரம் கணிக்கப்பட்ட பின்னர், ஓகஸ்ட் மாதத்தில் மாணவர்களுக்கான தகுதிநிலைச் சான்றிதழ் அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் வழங்கப்படவுள்ளது. (ப)

## முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு கல்விப் பணிப்பாளரை நியமிக்குக

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிப்பதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தவராசா அமலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; பணியில் இருந்த வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வுபெற்றுச் சென்று ஒரு மாதம் கடந்த நிலையிலும் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு புதிய கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. தற்போது பயணத் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் எமது மாவட்டத்தில் முல்லைத்தீவு வலயம் ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. போரால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைக் கொண்டுள்ள ஒரு வலயத்தின் தேவைகளை நிறைவுசெய்கின்ற பொறுப்பு வலயத்துக்கு உள்ளது. ஆனால் ஒரு நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளர் இல்லாமல் அப்பணிகளை இலகுவில் நிறைவேற்ற முடியாது. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அந்த வகையில் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு புதிய வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிப்பதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப-13)





## குளப்பிட்டிச் சந்தியில் மீன் விற்ற ஆறு வியாபாரிகள் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில், குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் மீன் வியாபாரம் செய்த ஆறு வியாபாரிகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்போதைய பயணத்தடைக் காலத்தில் நடமாடும் வியாபாரத்துக்கு மட்டுமே அனுமதியளித்துள்ள நிலையில், தேவையற்ற வகையில் மக்களை ஒன்று திரட்டி மீன் வியாபாரம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் அழைத்துச்செல்லப்பட்டனர். அத்துடன் அவர்கள் வியாபாரத்துக்கென வைத்திருந்த மீன்கள் மற்றும் அது சம்பந்தமான வியாபார பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபையால் ஏற்கனவே இவ்வாறான வியாபார நடவடிக்கைகளை மக்களைத் திரட்டி செய்ய வேண்டாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில் தொடர்ச்சியாக அப்பகுதியில் வியாபாரம் மேற்கொண்ட நிலையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ப-20)

# சட்டவிரோத மணல் அகழ்வால் விவசாயத்தை இழக்கும் நிலை

*கிளி. நீவில் கமக்கார அமைப்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சருக்கு கடிதம்*


கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி, உருத்திரபுரம் நீவில் கமக்கார அமைப்புக்குட்பட்ட வயல் நிலங்களில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எடுக்கத்தவறும் பட்சத்தில் குறித்த பிரதேசத்தில் விவசாயிகள் நிரந்தரமாக விவசாயத்தை இழக்கும் நிலை ஏற்படும் என்றும் நீவில் கமக்கார அமைப்பினர் கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.



அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

நீவில் கமக்கார அமைப்புக்குட்பட்ட தனியார் வயல் நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் உழவு இயந்திரங்கள் மற்றும் டிப்பர் வானங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் பொலிஸாருக்கும் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு பல தடவைகள் அறிவித்தும் இது வரை அதனைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வின் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்ற மணல், உருத்திரபும் வீதி ஊடாக பரந்தன்- பூநகரி வீதியால் யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சியின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டுசெல்லப்படுகிறது. எனவே எமது விவசாய நிலங்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ளவேண்டும் என்றுள்ளது. குறித்த கடிதத்தின் பிரதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது. (ப-14)



தமிழ்நாடு திருச்சி மத்திய சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள், தங்களை விடுதலை செய்யுமாறு கோரி, 5ஆவது நாளாக நேற்றும் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காள விரிகுடாவில் குறைந்த தாழமுக்கமே

## இலங்கைக்கு பாதிப்பில்லை

**கொழும்பு, ஜூன் 14**
**வங்காள விரிகுடாவின் வட பகுதியில் குறைந்த தாழமுக்க நிலைமையே ஏற்பட்டுள்ளதால், இலங்கைக்கு நேரடித் தாக்கம் ஏற்படாது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.
ஊவா மாகாணத்திலும், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.
இதேவேளை, நீர்கொழும்பில் இருந்து புத்தளம் ஊடாக காங்கேசன்துறை, முல்லைத்தீவு வரையிலான கடல் பிரதேசம் எதிர்வரும் சில மணித்தியாலங்களில் கொந்தளிப்பாகக் காணப்படக்கூடும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.
இந்தக் கடல் பிரதேசத்தில் காற்றின் வேகம் மணிக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கலாம் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (எ-4)

## கிளைக்குள் சிக்கி சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 14
றம்புட்டான் பறிப்பதற்காக மரத்திலேறிய சிறுமி, தவறி விழுந்து, இரண்டு கிளைகளுக்குள் சிக்கி, பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் பலாங்கொட மாமல்கஹ பிரதேசத்தில் நடந்துள்ளது.
பலாங்கொட ரத்மலவின்ன பாடசாலையில், தரம் 6 இல் கல்வி கற்கும் மலீசா தத்சரனி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 20 அடி உயரமான றம்புட்டான் மரத்திலிருந்தே குறித்த சிறுமி விழுந்துள்ளார். அவரது தலை மரக்கிளைகளுக்குள் சிக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

## விநியோக சேவைகள் கட்டணம் கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 14
விநியோக சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் நியாயமான முறையில் கட்டுப்படுத்தப்படும் என்று கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
தற்போதைய பயணக் கட்டுப்பாடுகளின் போது நுகர்வோர், அத்தியாவசியப் பொருள்களை தங்களது வீடுகளுக்கே பெற்றுக்கொள்ள முயல்கின்றனர். சில விநியோக சேவைகளால் அறவிடப்படும் அதிக கட்டணம் தொடர்பில், நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
அதற்கமைவாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் விநியோக சேவை வழங்குநர்களுடன் இடம்பெற்ற கந்துரையாடலில், விநியோக சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணத்தை நியாயமான மட்டத்தில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)



## வழக்கு ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்கவும்

*ரிஷாத் மீதான வழக்கில்*
*சி.ஐ.டிக்கு உயர்நீதிமன்று உத்தரவு*

கொழும்பு, ஜூன் 14
முன்னாள் அமைச்சரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் தம்மை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சி.ஐ.டி.யினர் தடுத்து வைத்துள்ளதை ஆட்சேபித்து தலா 500 கோடி ரூபா இழப்பீடு பெற்றுத் தரக்கோரி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ள வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள், சி.ஐ.டி.யினரிடம் இருப்பின் அவற்றை ஒரு வாரத்தில் உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கின்றோம் என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரால் மாதவ தென்னகோன் அறிவித்தார். சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஊடாக, ரிஷாத் பதியுதீன் மற்றும் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் தனித்தனியாக தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றில் நீதியரசர் எல்.ரி.பி. தெஹிதெனிய, ப்ரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன் பரிசீலனைக்கு வந்தது. அதன்போதேமேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
இதேவேளை, குறித்த மனுக்களை அவசர நிலை மனுக்களாக கருதி எதிர்வரும் ஜூன் 23 ஆம் திகதி மீள பரிசீலனைக்கு எடுக்க உத்தரவிட்டது. (கு-இ)



## கரையொதுங்கியது மற்றொரு ஆமை

கொழும்பு, ஜூன் 14
உயிரிழந்த நிலையில் மற்றுமொரு ஆமை காலி முகத்திடலில் கரையொதுங்கியுள்ளது.
இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதன் விளைவாக, பல கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந்து கரையொதுங்கி வருகின்றன. மீன்கள் மற்றும் ஆமைகள் என பல உயிரினங்கள் இவ்வாறு கரையொதுங்கியிருந்தன.
அந்த வகையில் நேற்றுமுன்தினமும் உயிரிழந்த நிலையில் ஆமை ஒன்று காலி முகத்திடலில் கரையொதுங்கியுள்ளது.
இதுவரை பத்துக்கும் மேற்பட்ட ஆமைகள் இவ்வாறு உயிரிழந்து கரையொதுங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-4)

## போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 14
அரச சேவையின் பதவி வெற்றிடங்களுக்கான, போட்டிப் பரீட்சைகளுக்கு, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக இலங்கை வெளிநாட்டுச் சேவையின் மூன்றாம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, நில பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிர்வாக சேவைகள் பிரிவின் தரம் III ஆம் வகுப்பு உதவிப் பணிப்பாளர் (மாவட்ட நில பயன்பாடு) பதவிக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை, வர்த்தக அமைச்சின், வர்த்தக திணைக்களத்தின் நிர்வாக சேவையின் மூன்றாம் தரத்தில் வர்த்தக உதவிப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, தகுதி அடிப்படையில் மேலாண்மை சேவை அலுவலர் சேவையின் மிக உயர்ந்த தரத்துக்கு பதவி உயர்வு பெறுவதற்கான போட்டிப் பரீட்சை, மேலாண்மை சேவை அலுவலர் சேவையின் மிக உயர்ந்த தரத்துக்கு பதவி உயர்வுக்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை ஆகியவற்றுக்கான விண்ணப்ப காலம் நீடிக்கப்பட்டுள்ளது.
விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்று பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம்.ஏ.பீ.தயா சௌரத்ன தெரிவித்துள்ளார். (எ-4)



## படகிலிருந்து மீட்கப்பட்ட 200 கிலோ ஹெரோய்ன்

கொழும்பு, ஜூன் 14
படகொன்றிலிருந்து 200 கிலோகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
வெலிகம பகுதிக்கு அருகில், எரிபொருள் சிலிண்டர்கள் மற்றும் பொதிகளில் அடைக்கப்பட்டு குறித்த ஹெரோய்ன் கடத்தப்பட்டுள்ளது.
புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருண்மியம் நலிவடைந்த மாணவரின் கல்விக்கு உதவுங்கள்

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஜூன் 14**

**தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலையால் தொடர் முடக்கம் ஏற்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் சீரான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. இதனை ஈடுசெய்ய உதவுங்கள் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன் கோரியுள்ளார்.**

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

புலம்பெயர் நாடுகளில் உள்ள கொடையாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் இங்குள்ள மக்களுக்கு அதிகளவான உதவிகளை வழங்கி வருகின்றனர். அவர்களின் பணி மகத்தானது. தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அபாய நிலைகளால் குழந்தைகளின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கான மாற்று வழிகளை அரசால் முன்னெடுக்க முடியவில்லை. அவ்வாறு முன்னெடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. காரணம் 40வீதமான மாணவர்கள் பொருண்மியம் நலிவடைந்துள்ளனர். அவர்களால் புதிய தொழிநுட்ப முறை கற்கைகளை தொடரமுடியாதுள்ளது. ஆகையால் கொடையாளர்களும், தன்னார்வத் தொண்டர்களும் அவர்களின் தொழிநுட்பத் துறைக்கூடான கற்றலுக்கு உதவவேண்டும். அத்தோடு தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்கள் அந்த மாணவர்கள் கற்பதற்கு வசதியாக அவர்களின் வறுமை நிலையை உறுதிப்படுத்தி அவர்களின் கற்றலுக்கான இணைய வசதிகளை இலவசமாக வழங்க வேண்டும் - என்றார். (ப-20)



## கிளி. கௌதாரிமுனையில் 132 குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி, ஜூன் 14

கல்வி வளர்ச்சி அறக்கட்டளையால் கிளிநொச்சி, கௌதாரிமுனையில் வசிக்கும் 132 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொவிட் - 19 காரணமாக நாடு முடக்கப்பட்டுள்ளதால், மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்ற நிலையில், அவர்களுக்கான உலருணவுப் பொருள்களை வழங்கும் செயற்றிட்டத்துக்கு அமையவே கிளிநொச்சி, பூநகரி கௌதாரிமுனை கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற 132 குடும்பங்களுக்கு தலா 2ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-214)



## நானாட்டானில் உதவி

மன்னார், ஜூன் 14

மன்னார் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட கிராமங்களில் கொரோனா மூன்றாவது அலையின் பயணக் கட்டுப்பாட்டால், தொழில் வாய்ப்பை இழந்து பாதிக்கப்பட்ட பொருண்மியம் நலிவடைந்த 100 குடும்பங்களுக்கு ரூபா 3 ஆயிரம் பெறுமதியான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. யாழ்.இந்துக் கல்லூரி சமூகத்தால் நேற்றுமுன்தினம், இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டது. நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி ரூபன், தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ப-213)



## பூநகரியில் 250 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி, பூநகரி - முழங்காவில் பகுதியில் வசிக்கும் பொருண்மியம் நலிவடைந்த 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

கனடா வாழ் மக்களின் நிதி உதவியில் செந்தில் குமரன் நிவாரண நிதியத்தால் முதல் கட்டமாக இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. இந்த நிவாரணப் பணிகள் மேலும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-13)



## சந்நிதியான் ஆச்சிரமத்தால் 100 குடும்பங்களுக்கு உதவி

கொடிகாமம், ஜூன் 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விசுவமடு மேற்கு, நெத்தலியாறு மற்றும் விசுவமடு கிழக்கு தொட்டியடி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கின்ற சுமார் 100 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. சந்நிதியான் ஆச்சிரமத்தால் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயக்காந்தன், சந்நிதியான் ஆச்சிரமத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கிணங்க குறித்த நிவாரணப்பொதிகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலர் சி.ஜெயக்காந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களான கேதினி மற்றும் கிருபாயினி ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-159)



## 50 உலருணவுப்பொதிகளை வழங்கினார் முல்லை. வர்த்தகர்

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கணுக்கேணி, குமாரபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள முறிப்பு மற்றும் பாற்பண்ணை கிராமங்களுக்கு உலருணவுப்பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

தண்ணீரூற்று பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான குமாரையா மகேந்திரன், தனது சொந்த நிதியில் ஐம்பது உலருணவுப்பொதிகளை வருமானம் குறைந்த பொதுமக்களுக்கு வழங்கினார். (த-13)



## மறவன்புலவு மக்களுக்கு உலருணவுப்பொதிகள்

கொடிகாமம், ஜூன் 14

நாட்டில் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த தென்மராட்சி - மறவன்புலவு மக்களுக்கு உலருணவுப்பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. அமரர் நவசிவாயம் வல்லிபுரநாதனின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தினரால் உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

உலருணவுப்பொதிகளை சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜபக்ச மற்றும் நாவற்குழி படைத் தலைமையகப் பொறுப்பதிகாரி மற்றும் அமரர் வல்லிபுரநாதனின் [illegible] ஆகியோர் வழங்கி வைத்தனர். (த-159)

## உலர் உணவு வழங்கல்

சாவகச்சேரி, ஜூன் 14

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தாலும், சாவகச்சேரி நகரப் பகுதியில் வாழும் பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென பொது அமைப்புகளால் சங்கத்துக்கு வழங்கப்படும் உதவிப் பொருள்களே, பிரிவில் வாழும் மக்களுக்கு வழங்கப்படுகின்றன என்றும், இதுவரை 40 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர் ம. நடனதேவன் ஆகியோரால் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ த.றவினதாஸ்
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

உலக குருதிக்கொடையாளர் தினம் இன்று

# குருதிக்கொடை

# உயிர்காக்கும் உன்னதர்க்கு ஒருநாள்


உலக சுகாதார நிறுவனம் குருதிக் கொடை செய்வோரை கௌரவிக்கும் முகமாகவும் குருதிக்கொடையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும் மக்கள் மத்தியில் குருதிக்கொடை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் ஜுன் மாதம் 14ஆம் திகதியை, உலகக் குருதிக் கொடையாளர் தினமாக அறிவித்துள்ளது. இத்தகையதொரு பின்னணியில் இன்றையதினம் மகத்துவம்மிக்கதாகப் பார்க்கப்படுகின்றது.

**ஜுலை 14ஆம் திகதி ஏன் தெரிவுசெய்யப்பட்டது?**

குருதி வகையை கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்ற ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த மருத்துவர் கார்ல் லாண்ட்ஸ்டெய்னெரின் பிறந்த நாள் இன்றாகும். ஆகவே அவரை கௌரவிக்கும் வகையில் இன்றைய தினம் உலக குருதிக்கொடையாளர் தினமாக கடைப்பிடிக்கப்படுகின்றது.

எமது உடலில் சுற்றியோடும் குருதியின் சிறுபகுதியை தன்னார்வமான முறையில் முன்வந்து பிறருக்கு நன்மை பயக்கும் வகையில் வழங்கும் செயற்பாடு குருதிக்கொடை எனலாம். இந்தச் செயற்பாடு உயிர் காக்கும் உயரிய சேவையைச் செய்வதற்குச் சமம் என்பதால் குருதிக்கொடையாளர்கள் மதிக்கப்படுகின்றார்கள்.

மனிதனின் உடலில் சராசரியாக 4.5 தொடக்கம் 5.5 லீற்றர் குருதி உள்ளது. குருதிக்கொடை செய்பவர் ஒரு நேரத்தில் 450 மில்லி லீற்றர் குருதியைக் கொடையாக வழங்கலாம். அவ்வாறு கொடுத்த குருதி நாம் உண்ணும் சாதாரண உணவின் மூலம் நான்கு தொடக்கம் எட்டு வாரங்களில் மீண்டும் சரியாகிவிடும்.



**குருதிக்கொடையை யாரெல்லாம் கொடுக்கலாம்?**

18 - 55 வயதை கொண்டவர்களும் ஒருவர் ஏற்கனவே குருதிக் கொடை செய்திருந்தால் அவர் 60 வயதுவரையும் இந்த புனிதமான பணியை தடையின்றி தொடரலாம், குருதிக் கொடையாளர் குறைந்தது 50 வீதமான உடல் நிறையைக் கொண்டிருக்க வேண்டும், ஆரோக்கியமான நபரொருவர் 4 மாதங்களுக்கு ஒரு முறை எந்தவித பாதிப்பும் இன்றி குருதிக்கொடை செய்யலாம். இவை குருதிக் கொடையாளர் ஒருவரின் அடிப்படைத் தகுதிகளாக உள்ளன.

நீங்கள் குருதிக்கொடை செய்ய முன்வரும்போது தகுதி வாய்ந்த மருத்துவர் ஒருவரால் பரிசோதிக்கப்பட்ட பின்பே குருதிக்கொடை செய்ய அனுமதிக்கப்படுவீர்கள். இதற்காக நீங்கள் செலவழிக்கும் நேரம் இருபது நிமிடங்கள் ஆகும். அதாவது உயிரொன்றைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் எடுத்துக்கொள்ளப்போகும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே.

அறிவியல் வளர்ச்சி காரணமாக மனிதர்களுக்கு நோயால் ஏற்படும் உயிரிழப்பு வெகுவாக குறைக்கப்பட்டுவிட்டது. ஆனாலும், விபத்துகளால் உயிரிழப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. விபத்தின்போது மனிதன் முதலில் அதிக குருதியிழப்பை சந்திப்பதனாலேயே உயிரிழப்பு ஏற்படுகின்றது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசரமாக குருதி ஏற்றும் செயற்பாடு இடம்பெறுகின்றது. இந்த சந்தர்ப்பத்திலேயே குருதிக்கொடையாளர்களின் ஒத்துழைப்பு பெறப்படுகின்றது. மருத்துவத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக குருதியானது பல கூறுகளாக பிரிக்கப்பட்டு டெங்கு மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டோரின் சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மகப்பேற்றுக் காலத்தில் அதிக குருதியிழப்பால் தாய்மார்களின் உயிரிழப்பதை தடுக்கவும் குருதி அதிகளவில் தேவைப்படுகிறது.

குருதியின் மகத்துவம் அறிவியல் வளர்ச்சியால் பல்வேறு சாதனைகளைப் படைத்த மனிதனால் இன்று வரை செயற்கையாக குருதியை உருவாக்க முடியவில்லை. அதனால் இதை, ஒருவர் உடலில் இருந்து எடுத்து மற்றவர்களுக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது. இங்குதான் குருதிக்கொடை முக்கியத்துவம் பெறுகிறது. குருதிக்கொடை வழங்கும் ஒவ்வொருவரும் கதாநாயகர்கள்தான் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

கொரோனாப் பெருந்தொற்று காரணமாக சர்வதேச ரீதியில் குருதிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இருந்தும் விலைமதிப்பற்ற குருதிக்கொடையாளர்களின் ஒத்துழைப்புடனும் ஊடகங்களின் உதவியுடனும் இந்த சவாலை எதிர்கொண்டு குருதியை சேகரித்து தட்டுப்பாடு நிவர்த்திசெய்யப்பட்டது. இலங்கையிலும் தேசிய குருதி நிலையமும் இந்த ஆபத்தை எதிர்கொண்டது. இருந்தும் குருதிக் கொடையாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினால் குருதித் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டது. இதே நிலைமைதான் வடமாகாண குருதி வங்கிகளுக்கும் ஏற்பட்டது. ஆனால் சமூக வலைத்தளங்களின் உதவியுடன் யாழ் போதனா வைத்தியசாலை பிராந்திய குருதி நிலையத்தின் குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைப்பாளர்கள், குருதிக்கொடையாளர்களின் ஒத்துழைப்புடன் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து சிறந்த குருதி மாற்று பிரயோக சேவையை முன்னெடுக்கக் கூடியதாகவிருந்தது. தற்போது இளைஞர் யுவதிகளின் ஆர்வத்தினால் அதிக குருதிக் கொடை முகாம்கள் ஏற்பாடுசெய்யப்பட்டதால் வங்கிகளில் குருதியின் இருப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளில் குருதிக்கொடையை ஊக்குவித்து வருகிறது.

இந்த ஆண்டு 'குருதி கொடுத்து உலகைத் துடிக்க வைக்கவும்' என்ற தொனிப்பொருளில் குருதிக் கொடையாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் உலகக் குருதிக்கொடையாளர் தினம் ஒவ்வொரு நாட்டில் கொண்டாடப்பட்டு வருகின்றது அந்த வகையில் இவ்வருடம் இத்தாலி நாட்டின் தலைநகரமான உரோமில் இந்தக் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.



# முகத்துக்கு அழகு தரும் மூக்குத்தி



முகத்துக்கு அழகான வடிவத்தைத் தருவது மூக்குதான். மேக் அப் போடுவது கூடுதல் அழகைத் தரும். மூக்கு குத்திக்கொள்வது மூக்கு அழகையும், முக அழகையும் அதிகரிக்கும். ஆண்களின் மூச்சுக்காற்றை விட பெண்களின் மூச்சுக்காற்றுக்கு சக்தி அதிகம் என்கின்றனர் முன்னோர்கள்.

இதனால் பண்டைய காலத்திலேயே மூக்கு குத்திக்கொள்ளும் வழக்கம் உருவானது. மூக்கு குத்துவதனாலும் காது குத்துவதனாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன. மூக்குக் குத்துவதால் பெண்கள் சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான நோய்கள் மனத்தடுமாற்றம் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். அகன்ற மூக்கு உள்ளவர்களுக்கு 5 கல் கொண்ட வட்ட மூக்குத்தி அழகை அதிகரித்துக் காட்டும்.

நீண்ட, சப்பை, குடமிளகாய் வடிவங்களில் உள்ள மூக்கை அவ்வளவு எளிதாக மாற்ற முடியாது என்றாலும் மூக்குத்தி போட்டு ஓரளவு அழகாக்கலாம். இவர்கள் சங்கு மூக்குத்தி, முத்து மூக்குத்தி போடுவதால் சப்பை மூக்கை மாற்றிக்காட்டும்.

கூர்மையான நாசி கொண்டவர்கள் இடது மூக்கில் ஒற்றைக்கல் மூக்குத்தி அணிவது முக அழகை அதிகரித்துக்காட்டும். கல் இல்லாத வெறும் மூக்குத்தி எந்த முகத்துக்கும் அழகாக பொருந்தும். சிவப்பாக உள்ளவர்களுக்கு பச்சைக்கல் மூக்குத்தி எடுப்பாக இருக்கும்.

மாநிறம் உள்ளவர்கள் சிவப்புக்கல் மூக்குத்தி, கருப்பு நிறமானவர்கள் வெள்ளைக் கல் மூக்குத்தி போட்டால் அம்சமாக இருக்கும். குறுகிய, நீண்ட முகம் உள்ளவர்களுக்கு ஒரு கல் மூக்குத்தி. அகல முகம் உள்ளவர்களுக்கு கற்கள் பதித்த அகன்ற மூக்குத்தி பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டுமா?

### மிரட்டுகிறார் அமைச்சர் கெஹலிய



**கொழும்பு, ஜூன் 14**

**சமூக ஊடகங்களில் ஊடாக போலிச் செய்திகளை வெளியிடுதல் மற்றும் பகிர்வதன் ஊடாக, 2002ஆம் ஆண்டு இல்லாதொழிக்கப்பட்ட குற்றவியல் அவதூறுச் சட்டத்தை நாட்டில் மீண்டும் நடைமுறைப்படுத்த சிலர் உந்துகின்றனர் என்று ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

சமூகஊடகங்களில் வெளியாகும் போலிச் செய்திகள் தொடர்பான கண்காணிப்புக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு பிரிவு அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு தரப்புக்களும் கண்டனம் வெளியிட்டு வருகின்றன. மாற்றுக் கருத்து முன்வைப்போரை அடக்கவே அரசால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என குற்றம் சுமத்துகின்றனர். இவ்வாறானதொரு நிலையிலேயே கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சமூக ஊடகங்களில் போலிச் செய்திகளைப் பகிர்ந்த குற்றச்சாட்டில் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கைதான சிலர், அரசியல் குழுக்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக தாம் மேற்படி போலிச் செய்திகளைப் பகிர்ந்துகொள்ள ஊக்கு விக்கப்பட்டோம் என விசாரணைகளின் போது குறிப்பிட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

மேலும் அரசு போலிச் செய்திகளை எவ்வாறு வரையறுத்துக்கொள்ளப் போகின்றது என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், பொதுமக்களை தவறாக வழி நடத்தும் வகையில் வேண்டும் என்றே வெளியிடப்படும், பக்கச்சார்பான தகவல்களைக் கொண்டமையும், முற்றிலும் தவறான செய்திகளைப் போலிச் செய்திகள் என்று குறிப்பிடலாம். உண்மையின் அடிப்படையில் எழுதும் எவரும் கருத்துச் சுதந்திரம் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் அவதூறு ஒரு குற்றவியல் நடவடிக்கையாகவே இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அரசு 2002ஆம் ஆண்டு ஆட்சியமைத்த போது அதனை சிவில் நடவடிக்கைக்கு உரியதாக மாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)



# நீண்டகால உறவை கைவிடமாட்டோம்

### பாதுகாப்புச் செயலாளர் இந்தியாவுக்கு உறுதி

கொழும்பு, ஜூன் 14

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நீண்டகாலமாக உள்ள உறவை சிதைக்கமாட்டோம். உறவை வலுப்படுத்த போதுமான ஒத்துழைப்பை வழங்குவோம் என்று இலங்கை பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன உறுதியளித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்னவுக்கும், இந்தியத்தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கொழும்பு கடற்பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியபோது, அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்வதற்கு இந்தியக் கடலோர பாதுகாப்பு படை வழங்கிய ஒத்துழைப்புக்கு இலங்கை சார்பில், கமல் குணரட்ன நன்றி தெரிவித்தார்.

அத்துடன் இரு நாடுகளுக்கு இடையில் நீண்டகாலமாக நிலவும் இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகள் தொடர்பில் கலந்துரையாடினர். கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் இரு நாடுகளுக்கிடையில் நீண்டகாலமாக நிலவும் இராணுவ பயிற்சி பரிமாற்றத்தின் சீரான செயற்பாடு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. சந்திப்பை நினைவுகூரும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இந்தியத் தூதுவர் ஆகியோருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. (எ-4)

# பெரும் நிதி நெருக்கடிக்குள் இலங்கை அரசு தள்ளப்படும்

### 2021இன் இறுதியில் நடக்கும் என்றார் செல்வம் எம்.பி




மன்னார், ஜூன் 14

நடப்பாண்டின் இறுதிக்குள் இலங்கை அரசு பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் என்று வன்னி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த வருட இறுதிக்குள் இலங்கை அரசு பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் என்பதை நான் ஆருடமாகக் கூறுகின்றேன். அதற்கான முதல் படியே இந்த எரிபொருள் விலை ஏற்றம். மிக மோசமான சூழல் இந்த நாட்டில் இருக்கின்ற நிலையில், இந்த எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. சாமானிய மக்கள் பயன்படுத்துகின்ற மண்ணெண்ணை ஏழு ரூபாவால், உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் சாதாரண மக்கள், கடற்றொழிலாளர்கள், மற்றும் விவசாயிகள் என அன்றாடம் உழைக்கின்ற மக்கள் அனைவரும் பெரும் பிரச்சனைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதனைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். ஏனைய அன்றாடம் பயன்படுத்தும் பால் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் விலையேற்றம் செய்யப்படுவதற்கான ஒரு காரண காரியமாக இது அமையப்போகின்றது. இந்த அரசு மக்களுடைய அன்றாடப் பிரச்சினையை சிந்திக்கின்ற அரசாகச் செயற்படவில்லை.

அரசு உடனடியாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்து, சாமானிய மக்களுக்கு நல்ல செய்தியைக் கூற வேண்டும். இல்லை என்றால் நான் கூறியது போல் இந்த வருட இறுதியில் கடன்கட்ட முடியாத பெரும் நெருக்கடியான சூழ்நிலையில் தள்ளப்பட்டு பெரும் நிதி நெருக்கடிக்குள் இந்த அரசு வரும்- என்றார். (ப-213)



# மக்களுக்கு சிக்கலை ஏற்படுத்தாது அரசு பொறுப்புடன் செயற்படவேண்டும்

### புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

நெருக்கடிகள் அதிகரிக்கும் நிலையில், அரசு மக்களுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தாது பொறுப்புடன் செயற்படவேண்டும் என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சி. கா. செந்திவேல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாட்டு மக்களுக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெறவோ, அவற்றைப் பாகுபாடின்றி அனைத்துப் பிரதேச மக்களுக்கும் விநியோகித்துப் பயன்படுத்தவோ முடியாத கையறு நிலையிலேயே ஆட்சியாளர்கள் இருந்து வருகின்றனர்.

ஆனால், கொரோனாத் தொற்றின் மறைவில், ஆட்சியில் இருப்போர் தமக்குத் தேவையானவற்றை அரசியல் ரீதியாகவும் பொருளாதார அடிப்படையிலும் கூச்சநாச்சமின்றி மக்களுக்கு விரோதமாக முன்னெடுத்து வருகின்றனர். நாட்டின் ஏக பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் அன்றாட உணவுப் பொருள்களினதும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களினதும் விலைகள் தாறுமாறாக உயர்த்தப்பட்டுள்ளன. அவற்றில் மேலும் விலை உயர்வுகளை ஏற்படுத்தும் வகையில், அரசால் எரிபொருள் விலை அதிகரிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு மக்களை வாட்டி வதைக்கும் இன்றைய ஆட்சியாளர்களான ராஜபக்ச சகோதர்கள், முதலாளிகள், உயர் வர்க்கத்தினர் மற்றும் வசதிபடைத்தவர்கள் ஆகியோருக்கு ஏற்றவாறு தீர்மானங்களையும் முடிவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் நாட்டின் நில, நீர் வளங்கள் விற்கப்படும் செயல்கள் சத்தமின்றி கொரோனாத் திரைக்குப் பின்னால் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றின் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டுக்கென, முன்னூறு வரையான ஒவ்வொன்றும் ஐம்பது லட்சம் பெறுமதியான சொகுசு வாகனங்களின் இறக்குமதிக்குரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றில் எதுவும் இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கானவை அல்ல என்பதை மக்கள் உணர்ந்து வருகின்றனர். தொடரும் இம் மக்கள் விரோதச் செயற்பாடுகளை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன், உடன் அவற்றை நிறுத்துமாறும் கோருகின்றது- என்றுள்ளது (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சூம்’ மூலம் கைதிகளுடன் உரையாடலாம்

கொழும்பு, ஜூன் 14

‘சூம்’ தொழில்நுட்பத்தின் மூலம், கைதிகள் தங்கள் உறவினர்களுடன் உரையாடுவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக, சிறைகளில் உள்ள கைதிகளை, உறவினர்கள் பார்வையிட தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனால் கைதிகள் தமது உறவினர்களுடன், சூம் வழியாக தொடர்பை ஏற்படுத்த புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெலிக்கடை மற்றும் அங்குனுகொலப்பெலெச சிறைச்சாலைகள் உட்பட ஆறு சிறைகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்குத் தேவையான வசதிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-4)

## மாங்காய் பறிக்க ஏறியவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார்கட்டு இருட்டுமடு கிராமத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் மரத்தில் இருந்து வீழ்ந்து உயிரிழந்தார். மாங்காய் பறிப்பதற்காக மரத்தில் ஏறிய அவர் தவறுதலாக விழுந்து உயிரிழந்தார். வெள்ளையன் சண்முகநாதன் (வயது 51) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தவராவார். இறப்புத் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-19)

ஆனந்தபுரம் மீனவர்

# தலைப்பகுதியில் உள்ள நரம்பு வெடித்தே இறப்பு

முல்லைத்தீவு, ஜூன் 14

ஆனந்தபுரத்தில் உயிரிழந்த மீனவர், தலையில் நரம்பு வெடித்தே உயிரிழந்தார் என்று மருத்துவ பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் கடந்த 9ஆம் திகதி மீனவர் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் விழுந்து உயிரிழந்திருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் இறப்புத் தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த மீனவரின் இறப்புக்கு என்ன காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. இதன்படி தலையில் உள்ள குருதி நரம்பு வெடித்தே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-19)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட 14 பேர் நேற்றுக் கைது

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி மருதநகர் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 14 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 4 லட்சத்து 15 ஆயிரம் ரூபா மீட்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதேவேளை குறித்த நபர்களுக்கு எதிராக பயணக் கட்டுப்பாட்டை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டிலும் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-6)

## இலங்கையிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவ ஆயுதக்குழு முயற்சியாம்!

கொழும்பு, ஜூன் 14

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குள் ஆயுதக் குழுவொன்று ஊடுருவ முயற்சிக்கின்றது என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் புலனாய்வுத் தகவல்களை அடுத்து இந்திய மத்திய அரசும் தமிழக காவல்துறையும் எல்லைப் பாதுகாப்பை இறுக்கியுள்ளன. (ம)

# உக்ரேனின் விமானங்கள் இலங்கை வான்படைக்கு

கொழும்பு, ஜூன் 14

உக்ரேனில் புதுப்பிக்கப்பட்ட 3 அன்டனோவ் 32 (Antonov32) ரக விமானங்கள் இலங்கை வான்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

1995 ஆம் ஆண்டு முதன்முறையாக, இலங்கை வான்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட அன்டனோவ் 32 ரக விமானங்கள், போர்க்காலத்தில் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தன.

எனினும் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தற்போது வரை, அந்த விமானங்கள், வான்படையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக சிறந்த பங்களிப்பை வழங்கவில்லை. இதனால் போக்குவரத்துக்காக உலங்கு வானூர்திகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டிய தேவை வான்படைக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில், தற்போது புதுப்பிக்கப்பட்ட விமானங்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதனால் இலங்கை வான்படையின் போக்குவரத்துப்பலம், 75 வீதமளவில் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-4)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஓய்வுநிலை சிரேஷ்ட ஆசிரியை

**திருமதி மேரி மல்லிகா ஜோண் அரியதாஸ்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஓய்வுநிலை சிரேஷ்ட ஆசிரியை

**திருமதி மேரி மல்லிகா ஜோண் அரியதாஸ்**


அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணக வாழ்விற்குள் 20.05.1955



விண்ணக மகிழ்விற்குள் 15.05.2021

**அமரர் நாகலிங்கம் மகேந்திரராசா**

(மகான்)

அன்பான உறவுகள், அயலவர்கள், வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்கள், நண்பர்கள், எம்முடன் துயரத்தில் கலந்திருந்தவர்கள் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், அவசர சிகிச்சைப் பிரிவினர், ஊழியர்கள் (Word 08,27) இறைவேண்டலுடன் தம் உடனிருப்பைக் காட்டி நின்ற அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் எம் இதயத்தின் ஆழத்தில் இருந்து பல கோடி நன்றிகள்.

எமது குடும்பத்தில் நிகழ்ந்த இந்த பேரிழப்பினால் துயரத்தில் தோய்ந்திருந்த எங்களுக்கு ஆறுதலான வார்த்தைகளாலும் தங்களது தாராளமான உதவிகளாலும் தங்கள் உடனிருப்பைக் காண்பித்து, எங்களுடன் உடன் பயணித்திருக்கின்றீர்கள். உங்களது உறவின் ஆழத்தை உண்மையாகவே நாம் கண்டு வியந்து நிற்பதோடு, எமது மனங்களில் ஆறுதலின் ஒரு தருணத்தையும் உணரச் செய்துள்ளீர்கள்.

எங்களது அப்பாவின் இழப்பினால் தாங்கமுடியாத துயரத்தில் மூழ்கியிருந்த எமக்கெல்லாம் நீங்கள் காட்டிய உண்மையான உறவின் நெருக்கத்தை எம்மால் ஒருபோதும் மறந்து விட முடியாது. உங்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறுவதுடன், அப்பாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தொடர்ந்தும் இறைவனிடம் உங்கள் செபங்களில் வேண்டிக்கொள்ள தயவோடு கேட்டுக் கொள்கின்றோம்.

இறைவனின் நல்லாசீர் உங்கள் குடும்பங்களில் நிலைத்திருக்க நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனம் நிறைந்த நன்றிகளுடன்**
**மனைவி, பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பெரமுனவின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'எரிபொருள் விலையை அதிகரித்து மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியுள்ள அரசு அதன் பழியை தனிநபர்மீது சுமத்த முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள குறித்த அறிக்கை அரசுக்குள் காணப்படும் முரண்பாடுகளை வெளிக்கொணர்ந்துள்ளது. தமது கட்சியே இந்த நாட்டை ஆட்சி செய்கின்றது என்று குறிப்பிடும் வகையில் அவரால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை அபாயம்மிக்கதாகவுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசிடமும் பொதுஜன முன்னணியிடமும் கேட்பதற்குப் பல கேள்விகள் எழுந்துள்ளன.

அரசும் அமைச்சர்களும் அறியாத வகையில் எரிபொருள் விலையைத் திடீரென அதிகரிப்பதற்கு அமைச்சரொருவர் மாத்திரம் எவ்வாறு தன்னிச்சையாகத் தீர்மானித்தார்? அவ்வாறு அவர் தனித்துத் தீர்மானமொன்றை எடுத்திருப்பாராயின் அமைச்சரவையின் ஒழுங்கு விதிகளை மீறி தனியொரு அமைச்சரால் இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்படும் வரை அரசின் பிரதானிகளான ஜனாதிபதியும் பிரதமரும் என்ன செய்துகொண்டிருந்தனர்? வழமையாக இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டால் அது அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானமாகவே கருதப்படும். அவ்வாறிருக்கையில் எவ்வாறு குறிப்பிட்டவொரு அமைச்சர் மீது மாத்திரம் குற்றம் சுமத்தப்படுகின்றது?

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்தது உண்மைக்குப் புறம்பானதா? அவ்வாறெனில் அது கற்பனைக் கதையா? குறித்த அமைச்சர் இவர்களுக்கு அப்பால் செயற்படுகின்றாரா?

இந்த அரசால் அண்மைக்காலங்களில் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் பல தீர்மானங்கள் மிகவும் இரகசியமாக சூட்சுமமான முறையில் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், திடீரென இந்தத் தீர்மானத்துக்கு மாத்திரம் பொதுஜன முன்னணி பகிரங்க அறிக்கையை வெளியிட்டுள்ளமையானது அரசுக்குள் காணப்படும் பெரும் முரண்பாடுகளை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறான அறிக்கைகள் ஊடாக அரசானது தம்மீது தவறில்லை என்று நிரூபிக்க முற்படுகின்றது. எனவே, எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு எடுத்துள்ள தீர்மானத்தை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமே தவிர இதிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சிக்கக்கூடாது. இந்தத் தீர்மானத்தில் மாற்றம் வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் வழங்குவதற்கான மக்கள் குரல் தோன்றிவிட்டது. தற்போது அரசு மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை முழுமையாக இழந்துள்ளனர்' என்றுள்ளது. (ம-22)

## கிளி. ஆடைத்...

ஆடைத் தொழிற்சாலைகளையும் தற்காலிகமாக மூடுவதற்கு அதன் உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அந்த இரு தொழிற்சாலைகளையும் தற்காலிகமாக மூடவேண்டும் என்று கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அத்துடன் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நானும் சென்று குறித்த தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுடன் பேச்சு நடத்தினோம். இதையடுத்தே தொழிற்சாலையை தற்காலிகமாக மூடுவதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளை மூடினாலும் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழமைபோல வழங்கப்படும் என்று உரிமையாளர்கள் வாக்குறுதி வழங்கியுள்ளனர் என்றார். குறித்த ஆடைத் தொழிற்சாலைகளுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் இரு வழக்குகள் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கொரோனா...

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து 23 ஆயிரத்து 163 ஆக எகிறியுள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 88 ஆயிரத்து 547ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 136 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## வடக்கில்...

அவர்களில் 7 பேர் கொரோனா இடைத் தங்கல் நிலையத்தில் உள்ளவர்கள். ஏனைய 27 பேரும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 145 பேரின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. நேற்றுப் பகல் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 731 பேரின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 21 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 8 பேருக்கும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைவிட, வவுனியா மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 2 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பரந்தன் கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் உள்ள 7 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-5)

## கொவிட்...

தகவல் கிடைத்ததை அடுத்து பொலிஸாரும் சுகாதாரத்துறையினரும் சம்பவ இடத்துக்குச் சென்றனர். திருமணத்தில் கலந்துகொண்டவர்கள் நாலாபுறமும் தப்பியோடியதை அடுத்து படப்பிடிப்பாளரின் கமராவில் பதிவாகியிருந்த ஒளிப்படங்களை வைத்து விழாவில் கலந்துகொண்டவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-26)

## எரிபொருள்...

இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'எரிபொருள் விலை அதிகரிக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்த பல விடயங்கள் குறித்து ஜனாதிபதியினதும், பிரதமரதும், சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களதும் பங்குபற்றலுடன் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவு குழுவால் கவனம் செலுத்தப்பட்டது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக அதிகரித்தமை இவற்றில் முக்கிய காரணமாகும். தற்போது மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 70 அமெரிக்க டொலரைக் கடந்துள்ளதுடன், அது மேலும் அதிகரிக்கக் கூடுமென சந்தைப் போக்குகளின் மூலம் தெரியவருகின்றது.

இலங்கையானது, எரிபொருள் இறக்குமதிக்காக பெருமளவு அந்நியச் செலாவணியைச் செலவிடும் ஒரு நாடு மட்டுமன்றி, அந்த இறக்குமதியிலேயே, நாட்டின் போக்குவரத்து சேவைகள் மற்றும் மின்சார உற்பத்தி என்பவை தங்கியுள்ளன.

இதன் மூலமே சில தொழிற்சாலைகளும் இயங்குகின்றன.

தனியார் மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் சுமார் 60 சதவீதமான எரிபொருள் பாவனை குறைக்கப்பட வேண்டும். எனவே, போக்குவரத்துக்காக மின்சாரக் கார்களைப் பயன்படுத்துவதுடன், புகையிரத சேவைகளை முடியுமானளவு மின்சாரத்தால் இயங்கும் சேவைகளாக மாற்றவேண்டும்.

எரிபொருள்களால் இயங்கும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவது முழுமையாக நிறுத்தப்பட்டு, மின்சாரக் கார் பாவனை ஊக்குவிக்கப்பட்டு, முச்சக்கரவண்டிகளுக்கும் மின்சார என்ஜின்களை வழங்குவதன் மூலம், போக்குவரத்துச் செலவுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

எரிபொருள் பயன்பாடு அதிகரித்துள்ள காரணத்தால், நகரப் பிரதேசங்களின் வளி மாசடைவதுடன், மக்கள் மத்தியில் சுவாச நோய்களும் அதிகரித்து வரும் நிலையில், சூழல்நேய வலுச்சக்தி மூலங்களுக்கு விரைவாகச் செல்ல வேண்டியது கட்டாயமாகியுள்ளது.

எனவே, விலை அதிகரிப்புக்கு மேலதிகமாக, இறக்குமதி செய்யப்படும் எரிபொருள்களின்மீது தங்கியிருக்கும் நுகர்வு முறைமையை மாற்றுவதற்கு அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பல முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த விலை அதிகரிப்பானது, சுதேச பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொது நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் மட்டுமே ஆகும் - என்றுள்ளது. (ம-22)

## எரிபொருள் விலை...

தொடர்பில் தீர்க்கமானதொரு முடிவு எடுக்கப்படவுள்ளது என அரச உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததால் ஏனைய சில பொருள்கள் மற்றும் சேவைகளின் விலையும் விரைவில் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்களும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். விலை உயர்வை அரசு மீளப்பெறவேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அதிகரிக்கப்பட்டுள்ள விலை உயர்வை மீளத் திருத்துவது தொடர்பில் இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப் பட்டுள்ளது. (ம-44)

## கம்மன்பிலவை...

உதய கம்மன்பிலவை பதவிவிலகுமாறு கோருவது வேடிக்கையானது இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

'ஜனாதிபதி, நான் மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் கூடியே எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான முடிவை எடுத்தோம். இதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் நான் பூரண அனுமதியை வழங்கினேன்.

வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில மட்டும் தனித்திருந்து எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுக்கவில்லை. இந்தத் தீர்மானத்தை உதய கம்மன்பிலவை உள்ளடக்கிய வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவே எடுத்தது.

இந்தநிலையில், வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவைப் பதவி விலகக் கோருவது வேடிக்கையானது. அமைச்சரைப் பதவி விலகுமாறு கோருவதன் உள்நோக்கம் தொடர்பில் ஆராய்வேன்.

பிரச்சினையை ஊதிப் பெரிதாக்குவது எமது அரசின் நோக்கம் அல்ல. எனினும், இந்த விவகாரம் தொடர்பில் எதிரணியினர் வாய்க்கு வந்த மாதிரி விமர்சனக் கருத்துக்களை வெளியிடுவது தான் மேலும் வேடிக்கையாக இருக்கின்றது' என்றார். (ம-22)

## பருத்தித்துறையில்...

அவர்கள் தனிமைப்படுத்தப்படாதவர்கள்.

இதையடுத்து அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த இரு பொலிஸாருடன் தொடர்பைப் பேணியவர்களுக்கு இன்று அன்டிஜென் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்தையே தோற்கடித்து சம்பியனானது நியூசிலாந்து!

லண்டன், ஜூன் 14

**இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 8 இலக்குகளால் வெற்றிபெற்றது நியூசிலாந்து அணி. முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்த காரணத்தால் தொடரை 1:0 என்ற அடிப்படையில் நியூசிலாந்து கைப்பற்றியது.**









நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 303 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக டான் லோரன்ஸ் 81 ஓட்டங்களையும், பேர்ண்ஸ் 81 ஓட்டங்களையும், ரூட் 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் போல்ட் 4 இலக்குகளையும், ஹென்றி 3 இலக்குகளையும், அஜாஸ் பட்டேல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 388 ஓட்டங்களைப் பெற்றது. வில் ஜோங் 82 ஓட்டங்களையும், றொஸ் றெய்லர் 80 ஓட்டங்களையும், கோன்வே 80 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் புரோட் 4 இலக்குகளையும், வூட், ஒலி ஸ்டோன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

85 ஓட்டங்கள் பின்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி திடீர் சரிவுகண்டு 122 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. மார்க் வூட் பெற்ற 29 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். பந்துவீச்சில் ஹென்றி, வாக்நெர் இருவரும் தலா 3 இலக்குகளையும், போல்ட், அஜாஸ் பட்டேல் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸ் முன்னிலை பெற்ற காரணத்தால் வெறும் 38 ஓட்டங்கள்தான் நியூசிலாந்துக்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அந்த அணி 2 இலக்குகளை மட்டுமே இழந்து வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக ஹென்றியும், தொடராட்ட நாயகனாக பேரணஸ், கோன்வே இருவரும் தெரிவானார்கள். (ம)



# இங்கிலாந்து 'திக்திக்' வெற்றி
## குரோசியா போராடித் தோல்வி

உரோம், ஜூன் 14

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் கடும் போராட்டத்துக்கு மத்தியில் குரோசியாவை வீழ்த்தியது இங்கிலாந்து அணி. ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 57ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் ரகீம் ஸ்ரேர்லிங் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அந்தக் கோல் தடுத்திருக்கக்கூடியதாக இருந்தாலும், குரோசிய வீரர் குறுக்கே காலை நீட்டியதை அடுத்து கோல் காப்பாளரின் 'ரிதம்' தவறாகி இங்கிலாந்தின் பக்கம் முதலாவது கோல் பதிவானது. பதிலடி கொடுப்பதற்கு குரோசியா பலமுறை முயன்றது. எனினும் எதுவும் பயனளிக்கவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இங்கிலாந்து.

பந்தை கோல் கம்பங்களை நோக்கிக் கொண்டுசென்றபோது இங்கிலாந்தின் அணித்தலைவர் கேன் கோல் கம்பங்களுடன் மோதிக் காயமடைந்தார். மைதானத்தை விட்டு உடனடியாக அவர் வெளியேறினார். முதலுதவிகளின் பின்னர் அவரின் உடல்நிலை சீரானது. (ம)

# ரோமெலு லுகாகு அதிரடி
## பெல்ஜியம் அபார வெற்றி

உரோம், ஜூன் 14

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் ரஷ்யாவைப் பதற்றம் இல்லாமல் வீழ்த்தியது பெல்ஜியம் அணி. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்திலேயே பெல்ஜியத்தின் சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார் லுகாகு. பெல்ஜியத்தின் ஆதிக்கத்துடனேயே நகர்ந்து சென்றது முதல் பாதி. ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் தோமஸ் மனுவர் பெல்ஜியத்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியில் பெல்ஜியம் அணி முழுவதுமாக ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாவது பாதியின் 88ஆவது நிமிடத்தில் ரோமலு லுகாகு அணியின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பெல்ஜியம். இந்த வெற்றியை அடுத்து 'பி' பிரிவில் பெல்ஜியம் முதலிடத்தில் உள்ளது. (ம)





... 14.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.